2013 மே 6]

அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ன்படி, மைய அரசினுடைய முன்அனுமதி பெற்றே சாலை அமைக்க இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மேற்படி சாலையைச் சீரமைத்து, தார்ச் சாலையாக மாற்றுவதற்கு, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை அல்லது வேறு எந்தத் துறையிடமிருந்தும் இதுவரை முறையான விண்ணப்பங்கள் எங்களுக்கு வரப்படவில்லை. அப்படி முறையான விண்ணப்பத்தை எங்களுக்குக் கொடுத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மைய அரசினுடைய முன்அனுமதியைப் பெற்று அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 400, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

400—

பாலம் கட்டுதல்

***19759—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, செருதூர்—வேளாங்கண்ணி சாலை, வெள்ளையாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 மே 6

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கீழ்வேளூர் தொகுதி, செருதூர்–வேளாங்கண்ணி இடையே வெள்ளையாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலமும், அப்பாலத்திற்கான இரு பக்க அணுகுசாலை அமைக்கும் பணியும் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கீழ்வேளூர் தொகுயிலுள்ள செருதூர் கிராமத்திற்கும், வேளாங்கண்ணி பேரூராட்சிக்கும் இடையிலே வெள்ளையாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும் என்கிற அந்த மக்களுடைய ஏறக்குறைய ஆறு ஆண்டுக்கால கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கீழ்வேளூர் பகுதியில் உள்ள கடற்கரை பகுதியில் அமைந்துள்ள வேளாங்கண்ணி ஒரு பேரூராட்சியாகும். அங்கே அமைந்திருக்கிற கிருத்துவ மதப் பேராலயம் நாடு முழுவதுமிருந்து மக்கள் வந்து போகிற ஒரு ஆன்மிகச் சுற்றுலாத் தலமாகும். வேளாங்கண்ணியின் தென்புறத்தில் செருதூர், பிரதாபராமபுரம், காமேஸ்வரம் இப்படிப்பட்ட கடற்கரைக் கிராமங்கள் இருக்கின்றன. அதற்கு இடையில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள். விளக்கமாகச் சொல்ல வேண்டாம்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கை. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீண்ட நாள் கோரிக்கை என்பதால் நீங்கள் நீண்ட நேரம் பேசக் கூடாது. (சிரிப்பு)*

2013 மே 6]

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு ஒரு பாலம் அமைக்கப்பட்டால், அந்தப் பகுதியில் இருக்கிற பல கிராம மக்களின் போக்குவரத்திற்கு அது பயன்படும். வெள்ளையாறு குறுக்கே இருப்பதனால் அக்கரையில் இருக்கிற மக்கள் வேளாங்கண்ணிக்கு பத்து கிலோ மீட்டர் தூரம் சுற்றிக் கொண்டு வருகின்ற சூழல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தை உடனடியாக அமைக்க வேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக நான் ஒரு துணைக் கேள்வியை இங்கே எழுப்பியபோது, இது நிருவாக அனுமதிக்காகச் சென்று இருப்பதாக எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, உடனடியாக அந்தப் பாலத்தை அமைத்து, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, செருதூர்–வேளாங்கண்ணி இடையே கிலோ மீட்டர் 0/4–ல் குறுக்கிடும் வெள்ளையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலமும், அப்பாலத்திற்கான இரு பக்க அணுகுசாலை கிலோ மீட்டர் 0/0–லிருந்து 0/8–ல் அமைக்கும் பணிகளுக்கு ரூ.500 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் ஏற்கெனவே சுனாமி புனரமைப்புத் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டு இருக்கிறது. எனினும், 2012–2013 இப்பணிக்கான விலை விகிதப் பட்டியலின்படி, ரூ.1,500 இலட்சம் விரிவான மதிப்பீடு மீண்டும் தயாரிக்கப்பட்டு, திருத்திய நிருவாக ஒப்புதல் 10–1–2013 அன்று அளிக்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப் புள்ளியும் கோரி, ஒப்பந்தப் புள்ளி வரப்பட்டு, தற்போது பரிசீலனையில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.*

திரு. பா. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து, வணங்கி வேண்டுகிறேன். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத், திருப்புலிவனம் சாலையில், பாலாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம், 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பாலமாகும். அந்தப் பாலம் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில், போக்குவரத்திற்கு இடையூறாக, அந்தப் பாலத்தில் நடந்து செல்வதற்கே ஒரு சிரமமான நிலை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு முன் தற்காலிகமாக அந்தத் தரைப் பாலத்தைச் சரி செய்து தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியா அல்லது நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட பகுதியா என்பது தெரிந்தால்தான், என்னுடைய துறையின் மூலமாக அந்தப் பாலம் அமைக்கின்ற பணியை எடுக்க முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பணி, ஊராட்சி ஒன்றியப் பகுதியாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். ஏற்கெனவே என்னிடத்திலே தெரிவித்திருக்கின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு*

2013 மே 6]

இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று இதைப் பரிசீலனை செய்வதற்கு ஆவன செய்வேன் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டப் பேரவைத் தேர்தலின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலே அம்புபூட்டிப்பாளையத்திற்கு, கிள்ளை பிரதானச் சாலையை இணைக்கக்கூடிய ஒரு பாலத்தை அமைத்துத் தருவோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அதேபோல, குமராட்சி ஒன்றியத்தில், நந்திமங்கலம் பூலாமேட்டுக்கு இடையிலே ஒரு பாலம் கட்டுவதற்கான மதிப்பீடெல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. பூலாமேடு கிராமம் என்பது நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் மருமகளாக வந்திருக்கிற கிராமம் என்கிற காரணத்தினால், இந்த இரண்டு பாலத்திற்கும் மதிப்பீடு தயார் செய்யப்படிருக்கிற நிலையிலே, இதை நிறைவேற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பாலங்களை இங்கே சுட்டிக்காட்டி, அந்த இரண்டு பாலங்களுக்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து அப்படி தயார் செய்யப்பட்டு வருகின்றபட்சத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து போடி வரை உசிலம்பட்டி,

ஆண்டிப்பட்டி, போடி ஆகிய மூன்று புறவழிச் சாலைகள் அமைக்கும் பணிகள் கடந்த 10 ஆண்டுக் காலமாக நிலுவையில் இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் இதைப்போன்ற புறவழிச் சாலைகள் அமைக்கும் பணிகள் நீண்டகாலம் நிலுவையில் இருக்கின்றன. அதை எடுத்துக்கொள்ளமுடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. மத்திய அரசு தமிழகத்தைப் புறக்கணிக்கிற வகையில் டீசல் விலையை ஏற்றுகிறது, மண்ணெண்ணெய் கொடுப்பதில்லை, நாம் கேட்ட மின்சாரத்தைக் கொடுப்பதில்லை, அதேமாதிரி, இந்தத் திட்டத்திற்கும் மத்திய அரசு முட்டுக்கட்டை போடுவதுபோல ஒரு தோற்றம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் புறவழிச் சாலைகள் அமைக்கும் பணியை முதன்மையாகக் கொண்டு அனைத்துப் புறவழிச் சாலைகளையும் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணி. உசிலம்பட்டி பகுதி மற்றும் பல்வேறு பகுதிகளைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். இவை தேசிய நெடுஞ்சாலையினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள். இந்த alignment-ஐ மாற்றியமைக்கவேண்டுமென்று மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தற்போது அது மாற்றியமைத்து அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்த அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட மதுக்கூர் ஒன்றியத்தில், மதுக்கூரிலிருந்து பெரியகோட்டை வழியாக சொக்கநாதபுரம் செல்லக்கூடிய வழியில் கண்ணன் ஆற்றின் மேலே பாலம் ஒன்று இருக்கின்றது. கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன்பு

2013 மே 6]

கட்டப்பட்ட பாலம் கண்ணன் ஆற்றிலே வெள்ளம் வரும் காலங்களிலே அந்த ஆற்றிலே பாலம் மூழ்கக்கூடிய காரணத்தினாலே, அந்தப் பகுதியினுடைய கிராமங்கள் எல்லாம் துண்டிக்கப்படுகின்றன. எனவே, பட்டுக்கோட்டை மக்களினுடைய நீண்டகால கோரிக்கையினை ஏற்று, இந்தப் பகுதியிலே வெள்ளத்தால் பாதிக்கப்படாத அளவிற்கு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியில் ஆய்வு செய்து, அந்த ஆய்விலே அந்தப் பாலம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தால், அங்கே பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய பொற்கால ஆட்சியிலேதான் 2011–2012–லே மாண்புமிகு அம்மா அவர்கள் 65 பாலங்கள் கட்ட ஆணையிட்டு, பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டு, அம்மாவுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 2012–2013–லே மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 121 பாலங்கள் கட்ட ஆணையிட்டு, அந்தப் பாலப் பணிகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோல், இந்த 2013–2014 ஆம் ஆண்டு 131 பாலங்கள் கட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது அந்தப் பாலங்கள் கட்டும் பணிகள் துவங்குவதற்குப் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள், எந்தெந்தப் பகுதிகளிலே பாலங்கள் வேண்டுமென்று கேட்கின்றார்களோ அதையெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்தப் பாலப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 401, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அனுமதியில்லாமல் எழுந்திருக்கக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் எத்தனை முறை கை தூக்கினாலும் நேரம் இருந்தால்தான் வாய்ப்புக் கொடுக்க முடியும். (குறுக்கீடு) அனுமதி இல்லை, இதில் எல்லாம் நீங்கள் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இதில் எல்லாம் நீங்கள் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் அதையெல்லாம் கேட்கக்கூடாது. (குறுக்கீடு) இதுமாதிரி கேட்டால் நான் கடுமையாக நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) இது முறையல்ல. உட்கார்ந்துகொண்டு இதுபோல் பேசவும் கூடாது.

வினா வரிசை எண் 401, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

401—

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

*__5558—திரு. ம. குணசேகரன்:__

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசுமை வேதியியல் மூலமாக சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பசுமை வேதியியல் மூலமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகளை மாசுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளச் செய்வதுடன், பசுமை வேதியியல்–Green Chemistry மூலப்